அன்புடன் நண்பர்களுக்கு,

இலங்கையில் நடைபெறும் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் போன்றவற்றில் புலம் பெயர் குழுவினர் சார்பில் பிரதிநிதியொருவர் ஆறு மாதகாலம் அங்கு தங்கிநின்று பங்கேற்பது மிகவும் பயனுள்ளது என்னும் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கான முன்மொழிதலொன்றை Dr.நடேசன் முன்வைத்தார். அதே நேரத்தில் இலங்கையின் நீதித்துறை அமைச்சின் செயலாளர் சுகத கம்லத் அவர்களும் இதேபோன்றதொரு கருத்தை Dr.பாலா அவர்களிடம் முன்வைத்திருந்தார்.

நடேசனும் பாலாவும் இதுபற்றி என்னிடம் கதைத்தபோது அந்தச் சவாலை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாக அறிவித்தேன். ஆறு மாதகாலத்திற்கு நான் எனது தொழில் மற்றும் குடும்ப விடயங்களில் இருந்து விடுபட்டு இலங்கை சென்று பணியாற்றவது நாம் மேற்கொண்டுள்ள இந்தப் பாரிய பணியை முன்தள்ளும் திசையில் சாதகமான பலனைத் தர சிறிதளவேனும் உதவும் எனவும் நம்புகின்றேன்.

Dr.நடேசனினதும் Dr.பாலாவினதும் முன்மொழிவுகளுக்கு ஆதரவும் ஊக்குவிப்பும் தெரிவித்து அதற்கான நிதியை வழங்க எமது உறுப்பினர்கள் காட்டிய ஊக்கம் என்னை நிறையவே உற்சாகப் படுத்தியிருக்கிறது. எமது குழுவின் ஏனையவர்களும்கூட உற்சாகமடைந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

நான் தனியொரு நபராகச் செல்வதைவிட புலம்பெயர் குழுவின் பிரதிநியாகச் சென்ற அங்கு பணியாற்றுவதன் மூலம் தாக்கமான பிரதிபலன்களைப் பெறமுடிவதோடு புலம்பெயர் தமிழர் - இலங்கை அரசு என்பற்றுக்கிடையேயான Partnership செயற்பாடு என்பதும் முன் தள்ளப்படும் வாய்ப்புக்கள் அதிகரிக்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.

நாம் ஆரம்பித்து வைத்திருக்கும் நல்ல முயற்சியானது சடுதியான திருப்பங்களையும் உடனடிப் பலன்களையும் தரக்கூடியதாக இல்லாவிட்டாலும் இலங்கை அரசாங்கத்துடனும் அரச இயந்திரத்துடனும் தொடர்ச்சியாக மேற்கோள்ளும் ஈடுபாடு (Engagement) மூலம் சாதகமான திசைவழியில் நிலைமைகளை தள்ளிச் செல்லக்கூடிய ஒரு தொடர் செய்றபாடாக (Process) இருக்க வேண்டும் என்பதே எனது நம்பிக்கையாகும்.

தொடர் செயற்பாடு என்று சொன்ன உடனேயே அந்த செயற்பாடு இடைநடுவில் நின்றுவிடவோ முறிந்துவிடவோ கூடாது என்பது தொடர்பாக நாம் அக்கறையாக இருத்தல் அவசியம் என்பது சொல்லாமலே புரியும். அந்த வகையில் எமது நடவடிக்கையையும் Diaspora – Sri Lanka Engagement Process என்று அழைக்கலாம். எனவே இலங்கையில் எனது பிரதான பணி எமது குழுவின் மீது நம்பிக்கையை ஏற்படுத்துவதும், நமது மக்களுக்காக நாம் முன்னெடுக்க விரும்பும் வேலைத் திட்டங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மையளிப்பதாகவும் அதேவேளை அவை எந்த வகையிலும் இலங்கை அரசாங்கத்திற்கோ அல்லது இலங்கைக்கோ பாதகமானதல்ல என்பதை அங்கு உறுதிப்படுத்துவதுமாகும்.

அடுத்ததாக ஏற்கனவே நமது குழுவினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள பணிகளை விரைவுபடுத்தி முன்நகர்த்துவதுமாகும்.

1. இலங்கையில் பதிவு செய்வதற்காக நாம் ஒழுங்கு செய்துள்ள நிதியத்தின் பணிகளை முன் நகர்த்துவது.
2. சரணடைந்துள்ள போராளிகளின் உளவள நலம் தொடர்பான ஆலோசனை (Psycho Social Counseling) வேலைத்திட்டத்தை விரைவில் ஆரம்பித்து முன்நகர்த்துவது.

3. ஏற்கனவே வெற்றிகரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கும் Little Aid ன் நிவாரணப்பணியை இன்னும் விஸ்தீரணப்படுத்துவது.

என்பன உடனடியாக நான் அங்கு சென்றதும் கவனத்தில் எடுத்து செயற்படுத்தப்பட வேண்டியவை எனக் கருதுகிறேன்.

ஏற்கனவே நாங்கள் பல தடவைகள் நேரடியாகவும் மின்னஞ்சல்கள் மூலமாகவும் பேசிய விடயங்களில் இலங்கை அரசாங்கத்துடன் உடனடி செயற்பாடுகளாக நான்கு விடயங்களை நாம் கவனத்திற்கு எடுத்திருந்தோம்.

1. Resettlement
2. Rehabilitation
3. Reconstruction
4. Reconciliation

இந்த நான்கு R கள் தொடர்பாக நாம் எந்த வகையில் சாதகமாகவும் தாக்கமுள்ளதாகவும் எமது பணிகளை முன்நகர்த்தப் போகின்றோம் என்பதிலேயே எமது வெற்றி தங்கியுள்ளது. மேற்சொன்ன நான்கு விடயங்களில் எதிலுமே இலங்கை அரசாங்கத்தினதும் அதிகாரிகளினதும் ஒத்துழைப்போ அனுமதியோ இன்றி நாம் தனியாக செயற்பட முடியாது என்பதுதான் யதார்த்தம். எனவேதான் எம்மீதான அவர்களின் நம்பிக்கை கெடாவண்ணம் நாம் செயற்படுவது முக்கியமாகின்றது.

மேற்சொன்ன 4R களையும் விட தற்போது நாம் தவிர்க முடியாமல் 5வது R யும் சேர்த்துக்கொண்டுள்ளோம். அதாவது Relief, அதில்தான் Little Aid ஈடுபட்டுள்ளது. மேற்சொன்ன எந்தப் பணியாக இருந்தாலும் நாம் தனியாக எமது விருப்பில் இவற்றை இலங்கையில் செய்ய முடியாது என்பதே உண்மை. எனவேதான் நான் அங்கு பணியாற்றச் சென்றால் அரசாங்கத்துக்கு எம்மீதான இந்த நம்பிக்கை வளர்வதற்காக செயற்பட வேண்டியது முக்கியமானதாகும்.

இந்த பரஸ்பர நம்பிக்கை தொடர்பாக நான் திரும்பத் திரும்பக் கூறுவதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. ஏனெனில் அதுதான் இலங்கையில் தற்போதைக்கு எமது பணிகளை தீர்மானிக்கப் போகின்றது.

தற்போது எமக்கிடையே சங்கடத்தையும் சர்ச்சையையும் ஏற்படுத்தியிருக்கும் விடயங்களாக

1. அகதிகளை மீளக் குடியமர்த்துவதில் அரசாங்கம் காட்டும் கால தாமதம்.
2. இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அரசாங்கத்தின் காலம் தாழ்த்தல்.

என்பவற்றைக் கூறலாம்.

இந்த விடயங்கள் தொடர்பாக நாம் எவ்வாறு எமது அதிருப்தியை அரசாங்கத்திடம் முன்வைப்பது என்பது எமக்குள் எழுப்பப்படும் கேள்வியாகும். மற்றையது இவ்வாறான விடயங்கள் தொடர்பாக நாம் பகிரங்க அறிக்கை விடுவதா? விடக்கூடாதா? அல்லது எவ்வாறான விடயங்கள் தொடர்பாக நாங்கள் பகிரங்க அறிக்கை விடுவது? எவ்வாறானவை தொடர்பாக பகிரங்க அறிக்கை விடாதிருப்பது? எனபனவும் எம்மிடையே சர்ச்சைக்குரிய விடயங்களாகும்.

ஒரு குழுவாகச் செயற்படும்போது இவை தொடர்பாக எமக்குள் ஒரு பொதுமுடிவு வேண்டும் என்பது உண்மை.

இவை ஒருபுறம் இருக்க....

தினமும் இலங்கையில் இருந்து வெளிவரும் செய்திகளின் வாயிலாக நாம் அறிந்து கொள்ளும் தகவல்கள் நமது மனங்களை சலனமடையச் செய்கின்றன. நாம் விரும்பிய வேகத்தில், நாம் விரும்பிய விதத்தில் நிலைமைகள் நகராததையிட்டு நாம் சலனமடைவதைவிட எம்மையறியாமல் ஆத்திரமும் அடைகின்றோம் என்பது எமது மின்னஞ்சல் தொடர்பாடல்கள் மூலம் வெளிப்படுகின்றன.

புலம் பெயர்ந்த குழுவினர் என்ற சுட்டுப் பெயருடன் தற்போது இனங்காணப்பட்டுள்ள நாம் இலங்கைக்கு சென்றுவந்த நாள் முதல் 'இவர்கள் என்னத்தை செய்து கிழித்துவிட்டார்கள்' என்கின்ற தோரணையில் ஆங்காங்கே எம்மீது அவதூறுகள் வீசப்படுவதையும் நாம் காண்கின்றோம். நாங்களும் எம்மையறியாமல் இலங்கையரசின் ஊதுகுழல்களாகி வருகின்றோமோ என்ற அச்சம் எம்மைப் பற்றிக்கொள்ளப் பார்கின்றது.

கடந்த மார்ச் மாதம் பாரிய எதிர்பார்ப்புக்களுடன் இலங்கைக்கு பயணித்த நாம் கடந்த 5 மாத காலத்தில் சிறிய அளவிலான நிவாரண உதவிகளைத் தவிர எதனையும் சாதிக்க முடியவில்லை என்னும் ஆதங்கம் எம்மை வாட்டுகின்றதும் புரிந்துகொள்ளக் கூடியதே.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் நாம் என்ன செய்வது என்பது ஒரு புறமிருக்க நாம் எதிர்பார்த்தபடி விடயங்கள் நகராமைக்கும் எங்களின் மீதே மாறிமாறி நாம் குற்றம் கூறிக்கொளவதை நாம் காண்கின்றோம். எமது புலம்பெயர்ந்த குழுவினர் இலங்கை அரசாங்கத்தோடு நிலைமைகளை எவ்வாறு கையாழுவது என்பது தொடர்பாகவும் எமக்குள்ளேயே நாம் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதும் தொடர்ந்து நிகழுகின்றது.

மிக மோசமான பாதிப்புகளுக்கும் முகம்கொடுத்து அரசியல், சமூக, பொருளாதார என்னும் சகல விதத்திலும் அநாதைகளாக ஆக்கப்பட்டுள்ள மக்களுக்கு நாமும் துரோகம் இழைத்துவிடக்கூடாது என்கின்ற ஆதங்கத்திலேதான் நாம் இப்படி ஆத்திரப்படுகின்றோமே அல்லாது ஒருவர் மீது ஒருவர் தேவையற்ற குற்றச்சாட்டுக்களை வைக்கும் நோக்கம் எம்மில் எவருக்கும் இருக்காது என்றே நான் நம்புகின்றேன்.

நாங்கள் யார்? என்பது தொடர்பாக எனது புரிதலை நான் தர விரும்புகிறேன்.

- நாங்கள் புலம்பெயர்ந்த மக்களின் பிரதி நிதிகளல்ல
- நாங்கள் ஒரு அரசியல் கட்சியோ ஸ்தாபனமோ அல்ல
- நாங்கள் ஒரு அழுத்தக் குழுவுமல்ல (pressure group)
- நாங்கள் ஒரு பரப்புரைக் குழுவமல்ல (campaign group)

அப்படியானால் நாங்கள் யார்?
என்னைப் பொறுத்தவரை நாங்கள் ஆரம்ப நிலையில் உள்ள ஒரு நல்லெண்ண Lobby group.

அத்துடன் அரசாங்கத்தைப் பொறுத்தவரை நாங்கள் புலிகளின் அரசியலுக்கு எதிரான ஒரு வெளிநாட்டு தமிழர் குழு.

நாங்கள் புலிகளின் அரசியலுக்கு எதிரானவர்கள் என அடையாளம் காணப்பட்டதாலும், Hidden agenda ஏதும் இல்லாத வெறுமனே நல்லெண்ணம் கொண்ட ஒரு Lobby group என்பதாலுமே பாரிய தடைகள் இன்றி இலங்கைகக்கு போய்வரும் அதிர்ஷடம் எமக்கு கிடைத்திருக்கின்றது என்பதே எனது கருத்தாகும். இலங்கையின் பிரதான எதிர்கட்சி உட்பட பலருக்கும் கிடைக்காத வாயப்புக்கள் எமக்குத் தரப்பட்டன.

இந்த வாய்ப்பு எமக்கு கிடைத்ததாலேயே நாம் இன்று உண்மை நிலைமைகளை கண்டறியவும் அதனடிப்படையில் நாம் செய்ய முனைபவைகளை செய்யக்கூடியதாகவும் இருந்தது. அத்துடன் இந்த வாய்ப்பு எமக்கு தொடர்ந்து இருந்தால்தான் எதிர்காலத்தில் பல விடயங்களை செய்ய முயற்சிக்க ஏதுவாகவும் இருக்கும். இந்த வாய்ப்பு எமக்கு எப்படிக் கிடைத்தது அதற்கு வழிகோலியவைகள் என்ன என்பதும் நாம் அறிந்ததே. எனவே இந்த வாய்ப்பை எந்த வகையிலும் இல்லாமல் செய்யாத விதமாகவே எனது செயற்பாடுகள் இலங்கையில் இருக்கும் என்பதை நான் இவ்விடத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அப்படியானால் இலங்கை அரசாங்கம் தொடர்பாக எமது அதிருப்திகளை எவ்வாறு அரசாங்கத்திடம் முன்வைப்பது பற்றிய கேள்விக்கு எனது கருத்து, எமக்கும் இலங்கை அரச தரப்பினருக்கும் முரண்பாடு ஏற்படாத வகையிலும், எமக்காக திறக்கப்பட்டிருக்கும் கதவு மூடப்படாத விதத்திலும், நாம் தற்போது செய்கின்ற ஏனைய பணிகள் தடைபடாத வகையிலும் அவற்றை முன்வைப்பதே தற்போதைய நிலையில் சிறந்த வழிமுறையாக இருக்கும்.

தமிழ் அரசியல் கட்சிகள்போல் ஜனரஞ்சக செயற்பாட்டில் நாமும் ஈடுபடுவது எமது பணிகளுக்கு மட்டுமன்றி தமிழ் மக்களுக்கும் அதிக நலனை தற்போதைக்கு உடனடியாக ஏற்படுத்தித் தரப்போவதில்லை. இதற்கான சான்று எமது கடந்தகால அரசியலும் அது வழி நடத்தப்பட்ட முறையும் என்பது நாமறிந்த உண்மை.

ஆனாலும் இலங்கையில் தற்போது செயற்படும் சகல தமிழ் கட்சிகளுடனும் நாம் தொடர்ந்து சந்திப்புக்களை மேற்கொள்ளுவதும் எமது பணிகளில் ஒன்றாக நாம் கருத வேண்டியுள்ளது.

**சரி, மிக மோசமானதொரு நிலைமையை நாம் கற்பனை செய்து பார்ப்போம்.**

இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வையும் முன்வைக்கப்போவதில்லை என்று எமக்குத் தெரிந்துவிட்டது என்று வைத்துக்கொள்ளுவோம். அடுத்து என்ன…?

இந்த அரசாங்கத்துக்கெதிராக நாமும் சேர்ந்து பிரச்சாரம் செய்து இலங்கையில் ஆட்சி மாற்றம் கொண்டு வருவதா? அப்படியானால் அது எவ்வளவு காலத்தில் முடியும்?

சரி, அப்படியானால் யார் பதவிக்கு வருவார்? யூ.என்.பி. தான் வரலாம்.

யூ.என்.பி பதவிக்கு வந்தால் தமிழர்களும் சிங்களவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றை முன்வைப்பார்கள் என்பதில் என்ன உறுதி?

அப்படி முன்வைத்தாலும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வீபியும், சிகல உருமயவும் ஏனைய சக்திகளும் சேர்ந்து அதனை நடை முறைப்படுத்த விடுவார்களா?
(ஆனால் இன்று விரும்பியோ விரும்பாமலே இந்த அரசியல் சக்திகளுடன் நாமும் தொடர்ந்து தொடர்புகளைப் பேணித்தான் ஆகவேண்டும். இதைச் செய்வதும் கொழும்பில் எனது பணிகளில் ஒன்று)

2004ல் புலிகள் பலமாக இருந்து, வடக்கு கிழக்கு ஒன்றாக இருந்து, சர்வதேச ஆதரவுடன் நோர்வே தலையீட்டுடன் நிலைமைகள் நகர்த்தப்பட்டு, பெருமெடுப்பில் விடயங்கள் நடந்தும் எதுவுமே ஒப்பேறவில்லையே ஏன்?

இலங்கையின் அரசியலைத் தீர்மானிக்கும் சுக்கான் தவிர்க்க முடியாமல் பெரும்பான்மை சிங்கள மக்களின் கைகளில் இருக்கின்றது என்னும் யதார்த்தம் எமக்கு புரிகிறதா? இதையெல்லாம் மீறி இந்திய அழுத்தம் சர்வதேச அழுத்தம் என்பனகூட குறுகிய காலத்தில் இலங்கையில் எதனையும் சாதித்துவிட முடியாத நிலைமையல்லவா காணப்படுகின்றது.

இதில் இன்றைய எமது அறிக்கை, அழுத்தம் என்பன யாரை என்ன செய்யப் போகின்றது?

இத்தகைய சூழ்நிலைகள் எம் கண்முன்னே தெளிவாகத் தெரிகையில், நொய்ந்து நொடித்து துவண்டு போயிருக்கும் எமது சமூகத்திற்கு சுயமாக எழுந்து நின்று தன்னை சுதாகரித்துக்கொண்டு முன்செல்வதற்கான சில அடிப்படை விடயங்களை செய்து கொடுக்க எமக்கு கிடைத்திருக்கும் வாய்ப்பை நாம் இல்லாதொழித்துக் கொள்ளலாமா? என்பதே என்னிடம் எழும் கேள்வியாகும்.

ஒரு வேளை நாம் பகிரங்கமாக அழுத்தம் கொடுக்க வேண்டிய நிலை வரலாம் எமது அழுத்தத்தினால் மாற்றம் வரவும் கூடும். ஆனால் தற்போது நாங்கள் இருப்பதே ஒரு தொத்துப்பறி நிலைதான். எனவே அந்தக் கட்டம் வரும்வரை நிதானமாக செல்வதே சரியென்று நம்புகின்றேன்.

தமிழ் சமூகத்திற்கான அரசியல் தீர்வு ஒரு புறமிருக்கு சாதாரண மனித சமூகமாக அது நடைபோட ஆரம்பிப்பதற்கே பலகாலம் செல்லும்போல் தெரிகிறது. கடந்த தமது முப்பது ஆண்டுகால கொடிய அநுபவத்தை 'தமிழர்கள் ஒரு சமூகமாக' ஒருமுறை அசைபோட்டு ஆராய்ந்து பாாப்பதற்கான ஆக்கத் திறனை அதற்கு வழங்குவதும் எமது தலையாய பணியென்பதை நாம் கணக்கில் எடுக்க வேண்டும். யாரை ஏற்றுக் கொள்வது யாரை நிராகரிப்பது, அடுத்து எந்த திசையில் கால் வைப்பது என்று 'அந்த சமூகம் தானே தீர்மானிப்பதற்கான' உள்ளார்ந்த பலமூட்டலை (internal empowerment) செய்வதற்கு எமக்கு கிடைத்திருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி நாம் எமது பங்களிப்பைச் செய்வதே சாலச் சிறந்தது.

எஸ்.மனோரஞ்சன்
2009-08-30